**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

அ.வ.எண்.290/2023 வா.சா.1 வெங்கடேஸ்வரன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 13.11.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது ஆழ்துளை கிணறை பிரதிவாதிகள் பயன்படுத்த கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்னேன். வழக்குரையில் 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குமூலம் எழும் விதமாக நான் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்தின் தென்மேற்கில் ஆழ்துளை கிணறு இருப்பதாக கட்சி செய்யும் நிலையில் அத்தகைய கிணறு இருப்பதை காட்டும் ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய ஆவணங்கள் அனைத்தையும் கொடுத்து விட்டேன். வழக்கு சொத்து எந்த காலையில் அமைந்துள்ளது என்றால் நல்லிடிபாளையம் கிராமம் புல எண். 133 ல் அமைந்துள்ளது.

3)வழக்கு பிரச்சனை எப்போது ஏற்பட்டது என்றால் 16-10-2023 அன்று ஏற்பட்டது. இவ்வழக்கில் 27-10-2023 அன்று பிரச்சனை ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2023 ம் ஆண்டு புரட்டாசியில் ஆழ்துளை கிணறு அமைத்தேன் அதன் பின் பிரச்சனை ஏற்பட்டது. வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறே இல்லை என்றும் அவ்வாறு இருந்திருப்பின் வா.சா.ஆ .8 அடங்கலில் அது குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. ஆழ்துளை கிணறு அடங்கலில் வராது. ஆழ்துளை கிணறு அடங்கலில் வராது என்பது தவறு என்றால் சரியல்ல.

4) ஆழ்துளை கிணறு அமைக்கும் முன் அரசு அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றால் நான் அவ்வாறு அனுமதி ஏதும் பெறவில்லை. 1 , 2 பிரதிவாதிகள் முன் விரோதம் காரணமாக என்னுடன் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தென்புறம் தேவராயபுரம் கிராம எல்லை அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் தென்புறம் தேவராயபுரம் கிராம புல எண். 339/1 அமைந்துள்ளது என்றால் தெரியவில்லை . மேற்படி தேவராயபுரம் கிராம புல எண். 339/1 ல் வடகோட்டு பகுதியில் தான் 3 ம் பிரதிவாதி ஊராட்சி பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆழ்துளை கிணறு மேற்சொன்ன காலையில் இல்லை என பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

5) 1 , 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கூறிய குற்றச்சாட்டுகள் பொய் என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு புகார் அளித்ததாக என் வழக்குரையிலும் சாட்சியத்திலும் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 3 முதல் 7 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை நான் படித்தேனா என்றால் எனக்கு அவசியம் இல்லாததால் படிக்கவில்லை. அவ்வாறு எனில் எனது முதல் விசாரணையில் நான் எவ்வாறு எதிர்வழக்குரை சங்கதிகளை மறுத்துள்ளேன் என்றால் நான் அமைத்த ஆழ்துளை கிணறை அவர்கள் அமைத்தாக கூறிதால் மறுத்தேன். எனது சாட்சிய வாக்குமூல விவரங்கள் யார் கூற தயார் செய்யப்பட்டது என்றால் நான் தான் கூறினேன். எனது சாட்சிய வாக்குமூல விவரங்கள் என்னால் கூறப்படவில்லை என்றும் அவ்வாறு நான் கூறியிருந்தால் மேற்கண்டவாறு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்திருக்க மாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) தேவராயபுரம் கிராம புல எண். 339/1 ல் 3 ம் பிரதிவாதி ஊராட்சி பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு அமைத்து பயன்படுத்தினால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி தற்போது 3 ம் பிரதிவாதி ஊராட்சி தலைவர் இல்லை என்றால் சரிதான். தேவராயபுரம் கிராம புல எண். 339/1 ல் தான் ஆழ்துளை கிணறு அமைந்துள்ளது என்றும் என் பூமியில் ஆழ்துளை கிணறு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறியுள்ளதாலும் வழக்குமூலம் எழாததாலும் வழக்கு பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/- (மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி